# இஸ்லாமியக் கட்டிடக் கலை

இஸ்லாமியக் கட்டிடக் கலை பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. இஸ்லாத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில் இது மிகவும் சாதாரண எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தது, அதன்பின் சிறிது சிறிதாக இந்தக் கலை மேம்படத்துவங்கியது, படிப்படியாக அது இக்கலையின் வளர்ச்சி உயர்வின் உச்சக்கட்டத்தையே அடைந்துவிட்டது. கட்டிடக்கலை என்பது எந்த ஒரு கலாச்சாரத்திலும் ஒரு முக்கியமான பிரதிபலிப்பாகவே அமைகின்றது, ஏனெனில், இது ஒரு கண்ணாடியைப்போன்றது. அதில் அந்தந்த சமூகங்களின் வளர்ச்சி, அவர்களுடைய கலைத்திறன், அவர்களின் சுவைகள் மற்றும் தத்துவங்களின் பிரதிபலிப்பாகவே ஆகிவிடுகின்றது. கட்டிடக் கலை எந்த ஒரு மனித சமுதாயத்தின் கலாச்சாரமாயினும் சரி, அவர்களுடைய கட்டமைப்பு மற்றும் வளர்ச்சியினை படம்பிடித்துக் காட்டுவதாகவே உள்ளது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும்.

இஸ்லாமியக் கட்டிடக்கலையின் வடிவங்கள் பல்வேறு வகையானவை, உதாரணமாக, பள்ளிவாசல்களின் கட்டிடங்கள், இது முஸ்லிம்களிடையே பெறப்படும் ஒரு மகத்தான பெருமைக்குரிய கலைத்திறனாகும். அவ்வாறே, குடியிருப்புகளை அமைப்பது, வீடுகளின் கட்டிடக்கலை, மத்ரசாக்களின் கட்டிடக்கலை மற்றும் வடிவங்கள் ஆகியன. முஸ்லிம்களுக்கு இக்கலையில் முழுமையான திறமை மற்றும் ஆற்றல் இருந்தது, ஏனெனில், அவர்களுக்கு, அக்காலக் கலாச்சாரங்களின் கட்டிடக்கலையின் அறிவும் ஆர்வமும் இருந்தது. அத்துடன், அவர்கள் தங்களுடைய மார்க்க மற்றும் கொள்கைகளின் அடிப்படையிலும் அதற்குப் பொருத்தமான வகையிலும் இக்கலையினை மேலும் மேம்படுத்தினர். இதன் பலனாக, ஒரு சிறப்புமிக்க இஸ்லாமியக் கலைத்திறன் மற்றும் வடிவங்கள் உலகுக்கு அறிமுகமாயின.

இஸ்லாமியக் கட்டிடக்கலையின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள் மற்றும் வடிவங்களைப்பற்றிய சில உதாரணங்கள் மற்றும் முன்மாதிரிகளைப் பற்றி அடுத்து வரும் பக்கங்களில் எடுத்துரைப்போம். இதன் மூலம் முஸ்லிம்களின் கட்டிடக்கலையில் இஸ்லாமியப் பண்புகள் மற்றும் அடிப்படைகள் எந்த அளவிற்கு கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளன என்பது தெளிவாகும்.

## இறைத்தூதர் ﷺ மற்றம் நேர்மையான கஹலீஃபாக்களின் காலத்துக் கட்டிடக் கலை

முஸ்லிம்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலம் மற்றும் நேர்மையான க்ஹலீஃபாக்களின் காலத்தில் இஸ்லாமியக் கட்டிடக்கலையின் அடிப்படைகள் மற்றும் விதிகளை முழுமையாகக் கடைபிடித்துவந்தனர்.



www.uzairfalahi.com

## மஸ்ஜிதுன் நபவி

இறைத்தூதர் ﷺ அவர்கள் மதீனா முனவ்வரஹ்வில் இந்த மஸ்ஜிதைக் கட்டினார்கள். இந்தப் பள்ளிவாசல் ஒரு எளிமையான கட்டிட அமைப் பின் வடிவமாகவே இருந்தது. ஏனெனில், எளிமை என்பது இஸ்லாத்து டன் இணைபிரியாத இன்றியமையாதப் பண்பாக இருந்தது. அவற்றின் வடிவங்கள் சதுரமானதாகவும் மத்தியில் திறந்தவெளியான முற்றமும் இருந்தது.அதன் நான்கு புறங்களிலும் தளம் போடப்பட்டிருந்தது, ஃகிப்லா வின் புறமான சுவர் மற்றச் சுவர்களைவிடப் பெரியதாக இருந்தது. இங்கே கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், மஸ்ஜிதின் மத்தியப்பகுதி வெளிச்சமும் காற்றும் கிடைக்கவேண்டும் என்பதற்காகவேண்டி திறந்த முற்றமாகவே அமைக்கப்பட்டிருந்தது.

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலத்திற்குப்பிறகு இதில் விரிவாக்கம் செய்யப்பட்டது. ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் மஸ்ஜிதின் பரப்பளவை அதிகமாக்கினார்கள், இதன் காரணமாக, கிழக்கு திசையில் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய அறைகளுக்கு ஒட்டியிருந்த சுவரைத் தவிர இறைத்தூதர் ﷺ அவர்கள் எழுப்பியிருந்த அனைத்துச் சுவர்களும் இடிக்கப்பட்டன. அதன்பின், பல்வேறு காலக்கட்டங்களில் விரிவாக்கப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கப்பணிகள் மறைந்த மன்னர் ஃபஹத் பின் அப்துல் அஜ்ஸீஸ் அவர்களுடையகாலத்தில் மேற்கொள்ளப்பட்டது, இத்திட்டத்தில் இறைத் தூதர் ﷺ அவர்களுடைய காலத்தில் இருந்த மதீனா மாநகரத்தின் எல் லைப்பரப்பு முழுவதையுமே மஸ்ஜித நபவியின் பகுதியாக ஆக்கப்பட் டது. இந்த மகத்தான விவாக்கத்திட்டத்தின் பலனாக இந்த மஸ்ஜித் கட்டிடக்கலையின் ஒரு தலைசிறந்த சின்னமாகவே ஆகிவிட்டது.

## மஸ்ஜிதுல் அஃக்ஸா

ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய காலத்தில் முஸ்லிம்கள் பைதுல் முஃகத்தஸைக் கைப்பற்றியபோது ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் பாலஸ்தீனத்தைவிட்டுப் பயணம் மேற்கொண்ட நேரத்தில் புனிதப் பாறை மற்றும் புர்ராஃக் கட்டப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் அவர்கள் தன்னுடன் இருந்த தோழர்களுடன் சேர்ந்து தொழுகை நிறைவேற்றிய இடத்தில் ஒரு மஸ்ஜித் கட்டவேண்டும் என்று ஆணையிட்டார்கள். அக்காலத்தில் பெருமளவிலான நபித்தோழர்கள் (ர) இஸ்லாத்தின்பால் அழைப்பதற்காகவும் மார்க்கப் பணிகளுக்காகவும் பைதுல் முஃகத்தஸில் குடியேறினார்கள். க்ஹலீஃபா அப்துல் மலிக் பின் மர்வான் மஸ்ஜித்

www.uzarialahi.com

அஃக்ஸாவின் கட்டிடப்பணிகளை ஆரம்பித்திருந்தார்கள், இப்பணி தொடர்ந்து க்ஹலீஃபா வலீத் பின் அப்துல் மலிக் காலத்தில் கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டன. அதன்பின், அதனுடைய அலங்கார வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்பாஸியப் பேரரசின் க்ஹலீஃபாவான அபூ ஜாஃபர் அல் மன்சூர் காலத்திலும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. முதலாம் சிலுவைப் போருக்குப்பிறகு கிறித்துவர்கள் பைதுல் முஃகத்தஸைக் கைப்பற்றியபோது அவர்கள் மஸ்ஜிதுல் அஃக்ஸாவில் பெரும் மாற்றங்களைச் செய்தார்கள். அவர்கள் மஸ்ஜிதில் தங்கும் அறை களைக் கட்டினார்கள், அதனுடைய பெயரை சுலைமான் வழிபாட்டுத் தலம் என்றும் மாற்றி அத்துடன் பல கட்டிடங்களையும் எழுப்பி அவற் றைக் குடியிருப்புகளாகவும் தானியக் களஞ்சியங்களாகவும் பயன்படுத்தி வந்தனர். அவர்கள் மஸ்ஜிதுக்குள்ளே அவர்களுக்கான ஒரு ஆலயத்தையும் அமைத்துக்கொண்டனர். சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கி.பி 1187 ல் மீண்டும் பைதுல் முஃகத்தஸைக் கைப்பற்றியபோது மஸ்ஜிதுல் அஃக்ஸாவிலிருந்து கிறித்துவர்களுடைய அனைத்துச் சின்னங்களையும் அகற்றி மிஹ்ராப் அகியவற்றை அமைத்து மஸ்ஜிதை மீண்டும் கட்டிச் சீரமைத்தார்கள்.

www.uzairfalahi.com

## குடியிருப்புகள்

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலம் மற்றும் நேர்மையான க்ஹலீஃபாக்களின் காலத்தில் மஸ்ஜிதுகளின் கட்டமைப்பில் எளிமை காணப் பட்டதுபோன்றே அவர்களுடைய குடியிருப்புகளும் இல்லங்களும் எளி மையானவையாகவே இருந்தன. இறைத்தூதர் ﷺ அவர்களிடம் ஒன்பது அறைகள் இருந்தன, அவற்றுள் நான்கு களிமண்ணினால் கட்டப்பட்டு பேரீத்தமர ஓலைகளினால் கூரையிடப்பட்டவை, மற்ற ஐந்து அறைகள் செங்கற்களினால் கட்டப்படைவையாக இருந்தன. அவற்றின் கூரைகள் கையினால் தொடும் அளவிற்கு இருந்தன, இவ்வாறே, நபித்தோழர்களின் வீடுகளும் கட்டப்பட்டிருந்தன.

## நகரங்கள்

இவ்விரு காலக்கட்டங்களிலும் முஸ்லிம்கள் பல்வேறு நகரங்களை நிர் மாணித்தனர், அவற்றுள் சில கீழ்வருமாறு:

**ஃபுஸ்த்தாத் நகரக் கட்டமைப்பு:** ஹஜ்ரத் அம்ர் பின் ஃஆஸ் (ர) அவர்கள் ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய கட்டளையின் அடிப் படையில் எகிப்து நாட்டில் இந்த நகரத்தினைக் கட்டமைத்தார்கள். நைல் நதிக்கரையில் அதற்கான ஒரு பொருத்தமான, சிறந்த நிலப்பரப்பினைத்

தேர்ந்தெடுத்தார்கள். துவக்கத்தில் இந்த நகரம் எவ்விதத் திட்டவரைவு மின்றி கட்டமைக்கப்பட்டது. வீடுகள் சிறியவையாகவும், அதன் ஜன்னல் களும் சிறியதாகாவும் இருந்தன. ஏனெனில், முஸ்லிம்களுடைய தேவை யானது ஒரு உறைவிடம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் அமைந் தது. வீட்டின் மத்தியில் வெளிச்சம் மற்றும் காற்று வசதிக்காக திறந்தவெளி முற்றம் இருக்கும். துவக்கத்தில் வீடுகள் தரை தளம் மட்டும் கொண்டதாக இருந்தன. அதன்பின், ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய காலத்தின் இறுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்கள் கட்டப்பட்டன.

தற்காத்தில் ஃபுஸ்த்தாத் நகரம் கெய்ரோ மாவட்டத்தின் பழைய எகிப்தின் பகுதியாகவே உள்ளது. அரபிமொழியில் ஃபுஸ்த்தாத் என்ற சொல்லுக்கு கூடாரம் என்று பொருள். இந்த நகரத்தின் பெயர் ஃபுஸ்த்தாத் என்ற ழைக்கப்படுவதற்குக் காரணம், ஹஜ்ரத் அமர் பின் அல் ஃஆஸ் (ர) அவர் கள் இந்த நகரத்தை முஜாஹிதீன்களின் பட்டாளமும் அவர்களுடைய கூடாரமும் அமைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் நிர்மாணிக்கவேண்டும் என்று முடிவு செய்து நிர்மாணித்தார்கள். இதனைப் பிதிபலிக்கும் வகை யிலேயே இந்த நகரம் ஃபுஸ்த்தாத் என்று பிரபலமாயிற்று.

www.uzairfalahi.com

### மஸ்ஜிது அம்ரு பின் அல் ஃஆஸ்

இது ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதிலும் எகிப்தில் முதன் முதலாகக் கட் டப்பட்ட பள்ளிவாசலாகும். இந்த மஸ்ஜிதை முஸ்லிம்கள் எகிப்து நாட் டின்மீது வெற்றிகொண்டு கைப்பற்றிய பின்பு ஃபுஸ்த்தாத் நகரில் கட்டி முடித்தார்கள். இந்த மஸ்ஜித் மஸ்ஜிது ஃபதஹ், மஸ்ஜிதுல் ஃஅதீஃக் மற்றும் தாஜுல் ஜவாமிஃ என்றும் அழைக்கப்படுகின்றது. ஜாமிஃஉ ஃஅம்ரு பின் அல் ஃஆஸ் நைல் நதியின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக் கின்றது.

இந்த மஸ்ஜித் முதன் முதலாகக் கட்டப்பட்டபோது **30 X 50** பரப்பளவைக் கொண்டிருந்தது, அதில் ஆறு கதவுகள் இருந்தன. ஹிஜ்ரி 53 ஆம் ஆண்டு (கி.பி 672) வரையில் மஸ்ஜித் ஃஅம்ரு பின் அல் ஃஆஸ் அதன் முதன் முதலான அளவிலேயே நிலைத்திருந்தது. ஹஜ்ரத் அமீர் முஃஆவியஹ் (ர) அவர்களுடைய கட்டளையினால் முஸ்லமஹ் பின் முக்ஹ்லித் அல் அன் சாரி (ர) அவர்கள் பாங்கு சொல்வதற்காகவேண்டி மஸ்ஜித் ஃஅம்ரு பின் அல் ஃஆஸ் கட்டமைப்பில் நான்கு மிம்பர்களைக் கட்டி இணைத்தார்கள். அதன்பின் படிப்படியாக பல்வேறு காலக்கட்டங்களில் தொடர்ந்து மரா மத்துப் பணிகளும் விரிவாக்கங்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இன்று மஸ்ஜித் ஃஅம்ரு பின் அல் ஃஆஸ் 110 மீட்டர் நீளமும் 120 மீட்டர் அகலமும் கொண்டதாக இருக்கின்றது.

ஹிஜ்ரி 564 ஆம் ஆண்டு முஸ்லிம் நாடுகளின்மீது சிலுவைப்போர்கள் தொடுக்கப்பட்டு, தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டபோது அங்கிருந்த ஆட்சி யாளரான வஜ்ஸீர் ஷாவர் ஃபுஸ்த்தாத் நகரத்தை சிலுவைப்போர்ப் படைகள் கைப்பற்றிக்கொள்வார்கள் என்ற அச்சம் ஏற்பட்டு அவருக்கு அவர்களை எதிர்த்துப்போராடும் அளவிற்கு வலுவான சாதனங்கள் இல் லாததை உணர்ந்து, தெரிந்தே அவர்கள் ஃபுஸ்த்தாத் நகரத்தைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். இதன் காரணமாக, ஃபுஸ்த்தாத் நகரம் முழுவ துமே தீயில் மூழ்கிவிட்டது, அத்துடன் மஸ்ஜித் ஃஅம்ரு பின் அல் ஃஆஸ் பெருமளவில் பரவிவிட்ட தீயிலேயே சிக்கித் தீக்கிறையாகிவிட்டது.

ஸலாஹுத்தீன் அய்யூபி எகிப்து நாட்டைத் தம்முடைய ஆட்சியின்கீழ் கொண்டுவந்தபோது ஹிஜ்ரி 568 ஆம் ஆண்டு மஸ்ஜித் ஃஅம்ரு பின் அல் ஃஆஸ் மீண்டும் புதுப்பித்துக் கட்டவேண்டும் என்று ஆணை பிறப்பித்தார் கள். இவ்வகையில், மஸ்ஜிதின் முன் பகுதி மற்றும் மிகப்பெரிய மிஹ்ராப் ஆகியன புதிதாகக் கட்டப்பட்டன. இதில் பளிங்குக் கற்கள் பயன்படுத்தப் பட்டன மற்றும் அவற்றின் மீது அலங்கார சிற்பக்கலை வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டன.

* * *

www.uzairfalahi.com